# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti.**

**Case No. C.C - 434/2014**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : விஜய் | | Caste | : |
| Father/Husband Name | : போஸ் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(A1 Died. A3 Present. A2 absent. Petition field and allowed )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 14.05.2026.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது செக்காணுாரனி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் எழுமலை காவல் நிலையத்தில் கடந்த 01.02.2012ம் தேதி 15.00 மணியளவில் சாா்பு ஆய்வாளா் லாவண்யா அவா்களுடன் நானும் தங்கமாயன் ஆகியோருடன் எழுமலைக்கு வடக்கே வாசிமலையான் கோவில் பெரிய ஓடை அருகில் ரோந்து செய்து வரும்போது TN 28 H 8663 என்ற அசோக் லைலேண்ட் லாாியை நிறுத்தி சோதணை செய்த போது பின்னால் பெயா் விசாலம் கேட்டு தெரிந்த டிரைவா் முருகேசன் மற்றும் உடனிருந்த லாாி உாிமையாளா் தவமணி, லோடுமேன் தங்கராசு ஆகியோா்களை விசாாித்தபோது லாாியிருந்த 2 1/2 யூனிட் மண்ணுக்கு அரசு அனுமதி இல்லாமல் ஏற்றி வந்தவா்களை காரணம் கூறி கைது செய்து சாா்பு ஆய்வாளா் அந்த இடத்தில் அத்தாட்சி தயாா் செய்தாா். தனிநபா் யாரும் இல்லாததால் நானும், தங்கமாயனும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம். எதிாியும் மற்றும் அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய சாா்பு ஆய்வாளா அவா்களுக்கு உறுதுணையாக இருந்தாா்கள். இது சம்பந்தாக சாா்பு ஆய்வாளா் விசாாித்தாா்கள்.

**குறுக்கு விசாரணை:**

**1.** எனது முன்பாக வரைபடமோ, பார்வை மகசரோ சார்பு ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் இல்லை. மணல் வண்டியை எதிரிகளுடன் கைப்பற்றிய நிலையில் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக காவல் நிலையத்தில் அன்றாட பணிநிமித்தம் சம்பந்தமாக பொது நாட்குறிப்பும் தனியாக பாக்கெட் நாட்குறிப்பும் பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். புள்ளிவிபர கணக்கிற்காக எனது மேல் அதிகாரி காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து போடப்பட்ட வழக்கிற்கு எனது மேல் அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.15 17:13:17 +0530